இலங்கை பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குக் குழு பற்றிய குழுவினால் அட்டவணையிடப்பட்ட நிலையியற் கட்டளைகள் 119(4) தொடர்பிலான அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்திடம் முன்வைத்தல்.

பாராளுமன்றத் தொடர் இலக்கம் 79

மாவட்ட செயலாளர் அலுவலகம் - மாத்தறை

அரசாங்க கணக்குக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டுதல்	கணக்கெடுப்பு அலுவலரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	நிகழ்கால முன்னேற்றம்
நிலையான சொத்துக்கள் பதிவை இற்றைப்படுத்தி நடாத்தப்படவில்லை	நிலையான சொத்துக்கள் பதிவை இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லப்பட வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	நிலையான சொத்துக்கள் பதிவை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. எப்படியாயினும் அரசாங்க கணக்குத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2021.11.16 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரசாங்க கணக்கு வழிகாட்டியில் 8.1 மற்றும் 8.2 ஆம் பந்திகளுக்கு ஏற்ப ஸிகாஸ் நிகழ்சித்திட்டத்தினுள் நிலையான சொத்துக்கள் மாதிரி ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதால், நிலையான சொத்துக்கள் பதிவை மேலும் நடாத்திச்செல்வதற்கு அவசியம் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் ஸிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தை இற்றைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடுகிறேன்.
செலவுப் பயன்பாட்டுப் பதிவை இற்றைப்படுத்தி நடாத்தப்படவில்லை.	செலவுப் பயன்பாட்டுப் பதிவை இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லப்பட வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	செலவுப் பயன்பாட்டுப் பதிவை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.
ஆபத்துப் பதிவை இற்றைப்படுத்தி நடாத்தப்படவில்லை.	ஆபத்துப் பதிவை இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லப்பட வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	ஆபத்துப் பதிவை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.
கணக்காய்வாளர் நாயகத்தினால் முன் வைக்கப்பட்டிருந்த அனைத்து கணக்காய்வு விசாரணைக்கும் ஒரு மாதத்துக்குள் பதில் அளித்திருக்கவில்லை.	கணக்காய்வு விசாரணைகளுக்கு விரைவில் பதில் அளிப்பதற்காக அனைத்து பிரிவுத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. சிக்கலான மற்றும் தொழிநுட்ப கணக்காய்வு விசாரணைகளைத் தவிர மிகுதிக் கணக்காய்வு விசாரணைகளுக்கு விரைவில் பதில் அளித்தல் மற்றும் அவ்வாறு பதில் அளிக்க முடியாத பட்சத்தில் இடைக்கால பதில் ஒன்றை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	தற்போது கிடைக்கப் பெற்றுள்ள கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாதத்துக்குள் பதில் அளிப்பதற்கு அல்லது அவ்வாறு பதில் அளிக்க முடியாத பட்சத்தில் இடைக்கால பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அகக் கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு	கணக்காய்வு விசாரணைகளுக்கு விரைவில் பதில் அளிப்பதற்காக அனைத்து பிரிவுத் தலைவர்கள்	தற்போது கிடைக்கப் பெற்றுள்ள கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாதத்துக்குள் பதில்

CamScanner

மாதத்துக்குள் பதில் அளிக்கப்படாத சந்தர்ப்பங்கள் தெரிவிக்கப்பட்டது.	மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. சிக்கலான மற்றும் தொழிநுட்ப கணக்காய்வு விசாரணைகளைத் தவிர மிகுதிக் கணக்காய்வு விசாரணைகளுக்கு விரைவில் பதில் அளித்தல் மற்றும் அவ்வாறு பதில் அளிக்க முடியாத பட்சத்தில் இடைக்கால பதில் ஒன்றை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	அளிப்பதற்கு அல்லது அவ்வாறு பதில் அளிக்க முடியாத பட்சத்தில் இடைக்கால பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் குறைந்த பட்சம் 4 தவணைகளாவது கூட்டங்களை நடாத்தி இருக்கவில்லை.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் குறைந்த பட்சம் 4 தவணைகளாவது கூட்டங்களை நடாத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை காலாண்டுக்கு ஒரு முறை நடாத்துவதற்கு இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
பொது வைப்புக் கணக்கில் காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதி 571 க்கு அமைவாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	காலாவதியான வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	காலாவதியான வைப்புக்களில் மேலும் பிடித்து வைக்க வேண்டிய வைப்புக்களைத் தவிர அனைத்து காலாவதியான வைப்புக்களை தற்போது தீர்க்கப்பட்டு கணக்காய்வுக்கு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடுகிறேன்.
இணைத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தவிர அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறி உத்தியோகத்தர் குழு நியமிக்கப்பட்டிருந்தது.	வெற்றிடங்கள் மற்றும் மிகையான உத்தியோகத்தர்கள் தொடர்பாக அறிக்கைகளை அமைச்சிடம் முன் வைக்கப்பட்டுள்ளது.	மாவட்ட செயலாலர் அலுவலகத்தின் நிர்வாகத்துக்கு புரம்பாக, அவ்வப்போது எடுக்கப்படும் அரச கொள்கைகளுக்கு அமைவாக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு மாவட்டத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதோடு அந்த இணைப்புக்கள் எங்களின் நிர்வாகத்திற்குப் புரம்பாக செய்யப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் அறியத் தருவதோடு அதற்கேற்ப அந்த உத்தியோகத்தர் மிகையான அளவில் காணப்படுகின்றது என்பதை குறிப்பிடுகிறேன்.
மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடாத்திச் செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடாத்த தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
மாவட்ட வீட்டுவசதி குழுக் கூட்டம் மாதாந்தம் கூடி இருக்கவில்லை.	மாதாந்தம் மாவட்ட வீட்டுவசதி குழுக் கூட்டத்தை நடாத்திச் செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	மாதாந்தம் மாவட்ட வீட்டுவசதி குழுக் கூட்டத்தை நடாத்த தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
2018 ஜனவரி 24 ஆம் திகதி 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய முறையாக தயாரிக்கப்பட்ட மனித வள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வள திட்டம் ஒன்று தயாரித்து செயல்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வள திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

CS CamScanner

தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டம் மூலம் ஒரு ஊழியருக்கு குறைந்த பட்சம் வருடத்துக்கு 12 மணித்தியால மேலதிக பயிற்சி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	COVID 19 நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக அரச உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் குறைவடைந்ததோடு, எதிர்காலத்தில் குறைந்த பட்சம் வருடத்துக்கு 12 மணித்தியால மேலதிக பயிற்சி ஒன்றை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	உரிய திட்டத்தினுள் பயிற்சி வாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதுடன், விரைவில் பயிற்சி வாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன்.
முழு ஊழியர் குழுவும் உள்ளடக்கப்பட்டு தொழில் ஆற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தமிடப்பட்டிருக்கவில்லை.	தொழில் ஆற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தமிடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	தொழில் ஆற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன் என்பதை அறிவிக்கிறேன்.
அலுவலக கணக்குகள் பற்றிய கணக்காய்வு கருத்துக்கு உட்பட்ட நிலையில் / விண்ணப்ப நிலையில் /பாதிப்பான நிலையில் இருந்தது.	கணக்கீட்டு முறைகள், நிதி ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு கணக்காய்வு கருத்து சாதகமான மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	ஏதிர்காலத்தில் குறைபாடுகளை நிறைவு செய்து கணக்காய்வு கருத்தை சாதகமான மட்டத்தில் நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்கிறேன்.
மீளாய்வு வருடத்தில் தொழில் ஆற்றுகை இலக்கை உரிய தினத்தில் முன்வைக்கப்படவில்லை.	மீளாய்வு வருடத்தில் தொழில் ஆற்றுகை இலக்கை உரிய தினத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	மீளாய்வு வருடத்தில் தொழில் ஆற்றுகை இலக்கை உரிய தினத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.
மாவட்ட மற்றும் பிரதேச போதைப்பொருள் ஒழிப்புக் குழுக் கூட்டம் காலாண்டுக்கு 01 வீதம் ஒன்று கூட்டப்பட்டிருக்கவில்லை.	மாவட்ட மற்றும் பிரதேச போதைப்பொருள் ஒழிப்புக் குழுக் கூட்டம் காலாண்டுக்கு 01 வீதம் ஒன்று கூட்டுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	மாவட்ட மற்றும் பிரதேச போதைப்பொருள் ஒழிப்புக் குழுக் கூட்டம் காலாண்டுக்கு 01 வீதம் ஒன்று கூட்டுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளினால் வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் எண்ணிக்கை 50% த்தை விடவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	COVID 19 நிலைமை, பொருளாதார நெருக்கடி நிலைமை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அரச ஊழியர்களின் பயிற்சி வழங்கல் குறைவடைந்ததோடு, எதிர்காலத்தில் குறைந்த பட்சம் வருடத்துக்கு 12 மணித்தியாலம் மேலதிக பயிற்சி ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	திட்டமிடப்பட்ட முறையில் பயிற்சி வாய்ப்புக்களை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.

மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலாளர் அலுவலகம்
மாத்தறை

Ganesha Amarasinghe
District Secretary/Government Agent
Matara.

பிரதான கணக்காளர்
மாவட்ட செயலாளர் அலுவலகம்
மாத்தறை

P. S. A. Kumari
Accountant
For District Secretary / Government Agent
Matara

CamScanner

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

CamScanner